# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**நாள் : 13.07.2023 வியாழக்கிழமை**

தீர்மானம் - 1 - இரங்கல் தீர்மானம்.

தீர்மானம் - 2 இந்திய அரசியலின் இமையம் ஒன்றிய அரசியலில் ஒப்பில்லா முதல்வர் நூற்றாண்டு கடந்த திராவிட பேரியக்கத்தின் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் தலைமையில் இயங்கி வரும் அமைச்சரவையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சராகவும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட கழக செயலாளராகவும்,தொடர்ந்து ஆறு முறை ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினராகவும், அந்த தொகுதி மக்களின் பேரன்பை பெற்றவருமான மாண்புமிகு அர.சக்கரபாணி அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. அதேபோல் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.காந்தி அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சராக சிறப்பாக பணியாற்றி கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததற்கு இம்மாவட்ட கழகம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் - 3

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவதென தீர்மானம் எந்நாளும் நம் நெஞ்சமெல்லாம் நீங்காது நிறைந்து இருக்கும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒப்பற்ற தலைவர், தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரும், ஓய்வறியா உழைப்பாளியுமாண மாண்புமிகு தளபதியார் அவர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான மாண்புமிகு சின்னவர் அவர்களது திருகரங்களால் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டதை சேர்ந்த மூத்த முன்னோடிகள் 1000 நபர்களுக்கு பொற்கிழி வழங்குவதென இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் - 4

கலைஞர் மகளிர் உரிமைதிட்டம் அறிவித்த கழக தலைவர், தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கு நன்றி. திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்த திட்டங்கள் மட்டும் இல்லாமல் தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல்வேறு திட்டங்களை தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்படுத்தி வரும் கழக தலைவர், தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் குடும்பத் தலைவிகளுக்கு உரிமைதொகை வழங்கப்படும் என தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தார். தமிழகத்தில் உள்ள மகளிர் நலனில் அக்கறை கொண்டு தமிழக முழுவதும் உள்ள மகளிர் அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யும் வகையில் சீறிய திட்டத்தை அறிவித்து அந்த திட்டத்தினால் இன்றைக்கு லட்சக்கணக்கான மகளிர் பயனடைந்து வருகின்றனர். ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால் அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம் என்ற மகா கவி சுப்பிரமணிய பாரதியார் கூற்றுக்கு இணங்க ஆணுக்கிங்கே பெண் நிகர் என்னும் சமத்துவ பாதையில் தமிழ்நாடு அரசு பல்வேறு நல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூக நீதி திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னேடுப்பாக வரலாற்றில் விளங்க உள்ள குடும்ப தலைவிகளுக்கு உரிமைதொகை லுழங்கும் திட்டத்தை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் என்று அறிவித்து பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் தமிழக முழுவதும் உள்ள குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் சீறிய திட்டத்தினை அறிவித்து செயல்படுத்த உள்ள கழகத் தலைவர், தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் - 5

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கையை 100 சதவிதம் செயல்படுத்தியற்க்கு பாரட்டுக்கள். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு கோடி புதிய உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் இலக்கினை முழுமையாக செயல்படுத்தி நூறு சதவிதம் நிறைவு செய்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் உறுப்பினர்களுக்கு மேல் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் சேர்த்திட்டதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உறுப்பினர் சேர்க்கைக்கு உறுதுணையாக இருந்த வளரும் இளைஞர்களின் வசிகரசக்தி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உதித்த ஓய்வரியா உதயசூரியன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திரு.தே.மதியழகன் னிஸிபு, அவர்களுக்கும், முழு முனைப்புடன் செயல்படுத்தி புதிய உறுப்பினர்களை சேர்த்த மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும், குறிப்பாக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுக்கும், உறுப்பினர் சேர்க்கைக்கு உறுதுணையாக இருந்த அனைத்து கழக உடன் பிறப்புகளுக்கும் இந்த மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துகொள்கிறது .

தீர்மானம் - 6

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியினை சீறியமுறையில் செயலாற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. தேர்தல் ஆணையத்தின் சார்பாக 2023 ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் பணிகள் வரும் 21 ம் தேதி முதல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை ஒரு மாத காலம் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட உள்ளது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும் இந்த பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு, BLA - 2 வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் முனைப்புடன் செயல்பட்டு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் பெயர், விலாசம் திருத்தம், புதிய வாக்காளர் சேர்த்தல், மறைந்த வாக்காளர்களை நீக்குதல் உள்ளிட்ட பணிகளை திறம்பட செயலாற்ற வேண்டும் என இந்த கூட்டத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் - 7

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிகளில் 100 வாக்காளர்களுக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த உறுப்பினர் அவர்களுக்காக ஒதுக்கக்கப்பட்ட 100 வாக்காளர்களின் விபரங்களை சேகரித்து பட்டியல் தயாரித்து 20 நாட்களுக்குள் பணிகளை விரைவாக செய்து முடித்து

மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், யஸிபு - 2 உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து இந்த பணியை விரைவாக முடித்துக் கொடுக்கும்படி இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.




ignou THE PEOPLE'S UNIVERSITY

# இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர் சேர்க்கை எஸ்சி/எஸ்டி மாணவர்களுக்கு இலவசம்

ஓசூர் Er.பெருமாள் மணிமேகலை பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் மத்திய அரசின் புதுடெல்லி இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் படிப்பு மையம் 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்புடன் செயல்பட்டுவருகிறது. இந்த மையத்தில் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் நடப்புக் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இளங்கலைப் படிப்புகளான பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., பி.எஸ்.டபள்யூ., பி.சி.ஏ., மற்றும் முதுநிலைப் படிப்புகளான எம்.ஏ., எம்.காம்., எம்.எஸ்.டபள்யூ., எம்.ஏ (சைக்காலாஜி) எம்.சி.ஏ., எம்.பி.ஏ படிப்புகளில் நடப்புக் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

எஸ்சி/எஸ்டி மாணவர்களுக்கு முற்றிலும் இலவசம், சிறு குறு தொழில் நடத்துபவர்கள் புதிய தொழில் தொடங்கவுள்ள மாணவர்கள் தொழில் முனைவோர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இளங்கலை படிப்பான எம்.எஸ்.எம்.இ.படிப்பிற்கான மாணவர் சேர்க்கை இந்த கல்வியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆறுமாத சான்றிதழ் படிப்புகளும் இம்மையத்தில் செயல்படுவதால் அதற்கான மாணவர் சேர்க்கையும் நடைப்பெற்று வருகிறது.

அனைத்து படிப்புகளும் பட்டியல் இன மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பிற மாணவர்கள் மிகமிகக் குறைந்த கட்டணம் செலுத்தினால் போதுமானது. எவ்வித வயது வரம்பும் யாருக்கும் கிடையாது. வீட்டிலிருந்தோ அல்லது பணிசெய்யும் இடத்திலிருந்தோ இப்பாடப் பிரிவுகளில் சேர்ந்து தொலைத்தூர கல்வியாக படிக்கலாம். இதன் மூலம் வழங்கப்படும் சான்றிதழ்கள் மத்திய மாநில அரசுகளால் அங்கீரிக்கப்பட்டவை. இதில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலோசனை வகுப்புகள் மிகச் சிறந்த பேராசிரியர்களைக் கொண்டு நடைபெறும். இக்னோவில் வழங்கப்படும் அனைத்து பட்டங்களும் மத்திய மாநில அரசு வேலைவாய்ப்புக்கு தகுதி வாய்ந்தது, மேலும் விவரங்கள் அறிய இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் பி.எம்.சி.டெக் (ஸ்ரீர்க்ங் : 2534) கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பேரா.சுதாகரன் 9940861202 மற்றும் திரு.கைலாசம் 9942850720 ஆகியோரை அணுகவும். ஆன்லைன் சேர்க்கைக்கு https://ignouadmission.samarth.edu.in/ என்ற இணையதள சேவையை பயன்படுத்தவும்.